# 2021-22 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு

முனைவர். பழனிவேல் தியாக ராஜன்
மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்

ஜனவரி, 2022
மார்கழி திருவள்ளுவர் ஆண்டு – 2052

## 2021-2022 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு

தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம்-2003 (சட்டம் எண்.16 / 2003), தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு 6(2)-ஆனது, நிதித்துறைப் பொறுப்பு வகிக்கும்அமைச்சர், அரையாண்டிற்கு ஒரு முறை வரவு-செலவுத் திட்டமதிப்பீட்டில் கணிக்கப்பட்டவாறு வருவாய் மற்றும் செலவினம் உள்ளதா என ஆய்வுசெய்து, வரவினம் மற்றும் செலவினத்தில் உள்ள தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு, வரவு-செலவுத் திட்டமதிப்பீட்டின் படியான குறியீடுகளை எய்துவதற்கு தீர்வு முறைகளைக் கண்டறிந்து, அந்த ஆய்வுமுடிவுகளை சட்டமன்றப்

பேரவையின் முன்பு வைக்க வேண்டும் என தெரிவிக்கிறது.

இச்சட்டத்தின் பிரிவு 6 (3)-ஆனது ஆய்வின் முடிவை சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கும் பொழுது, பின்வருவனவற்றை விளக்கும் விவர அறிக்கை ஒன்றை அமைச்சர் சமர்ப்பிக்கவேண்டும் என தெரிவிக்கிறது:-

(அ) இச்சட்டத்தின் படி மாநில அரசுக்கு உள்ள பொறுப்புகள் (Obligations) நிறைவேற்றப்படுவதில் காணப்படும் மாறுபாடுகள் (Deviations);

(ஆ)அத்தகைய மாறுபாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையா, மற்றும் அவை உள்ளபடியேயான அல்லது

எய்தப்படவேண்டிய வரவு-செலவுத் திட்ட இலக்குகளை ஒட்டி உள்ளனவா என்பன பற்றிய விவரங்கள்; மற்றும்

(இ) மாநில அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் தீர்வு நடவடிக்கைகள் (Remedial measures)

இச்சட்டப் பிரிவுகளுக்கு இணங்க 2021-2022 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் குறித்த ஏப்ரல் முதல் செப்டம்பர் 2021 வரையிலான ஆறு மாதகாலத்திற்கான ஆய்வினை 2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6 ஆம் நாளன்று மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர்

அவர்கள் மேற்கொண்டார். இந்த ஆய்வின் முடிவு சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகின்றது.

<u>வருவாய் வரவுகளின் ஆய்வு</u>:

அரசின் மொத்த வருவாய்க் கணக்கு வ்ரவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்.

அ) மாநிலத்தின் சொந்தவரி வருவாய்

ஆ) மாநிலத்தின் சொந்தவரி அல்லாத வருவாய்

இ) மத்திய வரிகளில் தமிழ்நாட்டிற்குப் பகிர்ந்தளிக்கப்படும் தொகை

ஈ) இந்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள்

இந்திய அரசின் உதவிமானியங்கள் மற்றும் மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு உட்பட 2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மதிப்பிட்ட மொத்த வருவாய் வரவுகள் ரூ.2,02,495 கோடியாகும். 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் ரூ.85,210 கோடியாகும். இது 2021-2022 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணிக்கப்பட்ட வருவாய் வரவுகளில் 42.08 சதவீதமாகும். இது 2020-2021 ஆம் ஆண்டில் அதே கால அளவில் பெறப்பட்ட வருவாய் வரவுகளைக் காட்டிலும் 26.42 சதவீதம் கூடுதலாகும். மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் குறித்த ஒப்பீட்டு விபரம் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

## 2021-2022 ஆம் நிதியாண்டின் முதல் ஆறுமாதத்திற்கான தமிழ்நாடு அரசின் மொத்த வருவாய் வரவுகளின் போக்கு

| வருவாய் வரவுகள் | 2020-2021 கணக்குகள் | 2021-2022 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | செப்டம்பர் 2020 வரையிலான கணக்குகள் | செப்டம்பர் 2021 வரையில் பெறப்பட்ட வருவாய் | 2020-2021 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2021-2022 ஆம் ஆண்டில் வளர்ச்சி விகிதம் (செப்டம்பர் வரை) | 2021-2022 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | | % | |
| மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | 1,06,153 | 1,26,644 | 38,426 | 52,908 | 37.69 | 41.78 |
| மாநிலத்தின் சொந்தவரி அல்லாத வருவாய் | 10,422 | 14,139 | 3,281 | 3,974 | 21.12 | 28.11 |
| மத்திய வரிகளில் பங்கு | 24,924 | 27,148 | 9,720 | 10,611 | 9.17 | 39.09 |
| இந்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் | 32,577 | 34,564 | 15,973 | 17,717 | 10.92 | 51.26 |
| **மொத்தம்** | **1,74,076** | **2,02,495** | **67,400** | **85,210** | **26.42** | **42.08** |

(அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாய்:

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான முதல் ஆறு மாதங்களில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் ரூ.52,908 கோடியாகும். இது 2021-2022 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 41.78 சதவீதமாகும். இது முந்தைய ஆண்டின் அதாவது 2020-2021 ஆம் ஆண்டு அதேகால அளவில் பெறப்பட்ட வருவாயோடு ஒப்பிடும்போது 37.69 சதவீதம் உயர்ந்துள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாதகாலத்திற்கான மாநிலத்தின் சொந்த வரிவருவாய்ப் போக்கின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மாநில வரிகள் | 2020 -2021 கணக்குகள் | 2021-2022 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | செப்டம்பர் 2020 வரையிலான கணக்குகள் | செப்டம்பர் 2021 வரையில் பெறப்பட்ட வருவாய் | 2020-2021 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2021-2022 ஆம் ஆண்டின் வளர்ச்சி விகிதம் (செப்டம்பர் வரை) | 2021-2022 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | | % | |
| வணிகவரிகள் | 81.393 | 96,109 | 30,053 | 40,508 | 34.79% | 42.15% |
| மாநில ஆயத் தீர்வைகள் | 7.822 | 8,770 | 3,190 | 3,496 | 9.59% | 39.86% |
| முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு கட்டணங்கள் | 11.675 | 13,253 | 3,586 | 6,237 | 73.93% | 47.06% |
| வாகனங்கள் மீதானவரிகள் | 4.561 | 6,582 | 1,496 | 2,530 | 69.12% | 38.44% |
| ஏனையவை | 702 | 1,930 | 101 | 137 | 35.64% | 7.10% |
| **மொத்தம்** | **1,06,153** | **126,644** | **38,426** | **52,908** | 37.69% | 41.78% |

2017 ஆம் ஆண்டு ஜூலை 1 முதல் பொருட்கள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்தப்பட்டது. பொருட்கள் மற்றும்

சேவைகள் வரி விதிமுறைகளின்படி இவ்வரி அமலாக்கத்தினால் ஏற்படும் இழப்பீட்டுத் தொகையை மாநில அரசிற்கு அளவு குறையாமல் இந்திய அரசு உறுதியாக வழங்க வேண்டும். மாநில முக்கிய வரியினங்களில் 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பெறப்பட்ட வருவாய், கடந்த ஆண்டில் இதே காலக்கட்டத்தில் பெறப்பட்ட வருவாயுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சி காணப்படுகிறது. மீதமுள்ள நிதியாண்டிலும் இந்த போக்கு தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் நிர்ணயிக்கப்பட்ட வருவாய் இலக்குகளை அடைவதற்கு வரிவசூலினை மேம்படுத்தவும் கூடுதல் நிதி ஆதாரங்களைத்

திரட்டும் வழிமுறைகளுக்கான முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும்.

<u>(ஆ) மாநிலத்தின் சொந்தவரி அல்லாத வருவாய்:</u>

2021-2022 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடான ரூ.14,139 கோடியில், 2021-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பெறப்பட்ட வருவாய் ரூ.3,974 கோடியாகும். இது, முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் பெறப்பட்ட வருவாயைக் காட்டிலும் 21.12 சதவீதம் வளர்ச்சியைக் காட்டி, 2021-2022 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 28.11 சதவீதமாகவும் உள்ளது. வருவாய் வசூலின் நடப்புபோக்கின் அடிப்படையில், 2021-2022 ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில்

கணிக்கப்பட்ட வருவாயில், கோவிட் பெரும் தொற்றின் இரண்டாவது அலை வருவாய் வசூலில் எற்படுத்திய பாதிப்பின் காரணமாக மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் வரவுகளில் பற்றாக்குறை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டணங்கள் மற்றும் ஏனைய வரியல்லாத வரவுகளை திறம்பட வசூலிப்பதன் மூலம் மீதமுள்ள நிதியாண்டில் வருவாய் வசூலை மேலும் மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

<u>(இ) மத்திய வரிகளில் மாநிலத்தின் பங்கு:</u>

பதினைந்தாவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, மத்திய வரியின் மாநில

அரசுகளுக்கான நிதிப்பகிர்வில் தமிழ்நாட்டிற்கான பங்கு 2020-2021 ஆம் ஆண்டு 4.189 சதவீதத்திலிருந்து 2021-2022 ஆம் ஆண்டு 4.079 சதவீதமாக சிறிதளவு குறைக்கப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டின் அதாவது 2020-2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூ.24,924 கோடியை காட்டிலும் 2021-2022 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மத்திய வரிகளில் மாநிலத்தின் பங்கு தொகை ரூ.27,148 கோடியாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பெரும் தொற்றுக்கு பின்னர் பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாக வரி வசூலில் முன்னேற்றம் ஏற்பட்டு மாநிலத்தின் பங்கு வரவு 2020-2021 ஆம்

ஆண்டைக் காட்டிலும் 2021-2022 ஆம் ஆண்டில் ரூ.2,224 கோடி என ஓரளவிற்கு அதிகரிக்க கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. செப்டம்பர் 2021 வரை ரூ.10,611 கோடி பெறப்பட்டுள்ளது. இது 2021-2022 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 39.09% ஆகும்.

(ஈ) இந்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள்:

2021-2022 ஆம் ஆண்டிற்கான இந்திய அரசு நிதி அளிக்கும் திட்டங்கள் உட்பட, இந்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் ரூ.34,564 கோடி என கணிக்கப்பட்டதில், 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை ரூ.17,717 கோடி வரப்பெற்றது. இது, 2021-2022 ஆம்

ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் கணிக்கப்பட்ட உதவி மானியத்தில் 51.26 சதவீதமாகும். இதே காலகட்டத்தில் முந்தைய ஆண்டு இந்திய அரசிடமிருந்து வரப்பெற்ற உதவி மானியம் ரூ.15,973 கோடி ஆகும்.

இந்திய அரசானது, 2014-2015 முதல் சில மத்திய-மாநில அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான பங்களிப்பு முறையினை மாற்றியதன் விளைவாக அதிகரித்த மாநில அரசின் பங்களிப்பிற்காக சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து வழங்க வேண்டியுள்ளது. அதிகமான நிதியை மாநில அரசு ஒதுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மாநிலத்தின் பங்கு அதிகரித்தனால் ஏற்பட்ட நிதிச்சுமையுடன், சில திட்டங்களுக்கு

செலவிடப்பட்ட தொகையினை திரும்பபெறுவது மற்றும் பங்கு தொகையினை பெறுவதில் ஏற்படும் கால தாமதத்தாலும் மாநில அரசு பாதிக்கப்படுகிறது. இந்திய அரசிடமிருந்து விடுவிக்கப்பட வேண்டிய நிலுவைத்தொகை மற்றும். நடப்பு நிதியாண்டிற்குரிய மானியத்தினை பெறுவதற்கு, தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் விளைவாக, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி இழப்பீட்டின் கீழ் நிலுவையில் இருந்த முந்தைய ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகை ரூ.5,224 கோடியை 2021-22 ல் இந்திய அரசு விடுவித்துள்ளது. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் அவர்கள்

டிசம்பர் மாதம் 30 ஆம் தேதி அன்று நடைபெற்ற வரவு-செலவு திட்டத்திற்கு முந்தைய கூட்டத்தில் பங்கேற்று மேலே பட்டியிலிடப்பட்ட பிரச்சனைகளுடன் மேலும் பல கோரிக்கைகளை மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர், மத்திய நிதித் துறை செயலாளர் மற்றும் மூத்த அதிகாரிகளுக்கு முன் வைத்தார்.

<u>செலவினங்கள் குறித்த ஆய்வு</u>

<u>(அ) வருவாய்க்கணக்குசெலவினம்</u>

2021-2022 ஆம் நிதியாண்டிற்கான (திருத்த வரவு-செலவுத் திட்டத்தில்) மதிப்பிடப்பட்ட வருவாய்க் கணக்கு செலவினங்கள் ரூ2,61,188 கோடி இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு

செப்டம்பர் மாதம் வரையிலான வருவாய்க் கணக்கு செலவினம் ரூ.94,628 கோடியாகும். இது, வருவாய்க் கணக்கு செலவினங்களுக்கான மொத்த ஒதுக்கீட்டில் 36.23 சதவீதமாகும். முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் ஏற்பட்ட வருவாய்க் கணக்கு செலவினம் ரூ.90,991 கோடி. 2021-2022 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதத்திற்கான வருவாய்க் கணக்கு செலவினம் கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தைக் காட்டிலும் 4 சதவீதம் உயர்ந்துள்ளது. ஏற்கனவே நடைமுறையில் உள்ள திட்டங்களுக்கான செலவு, உணவு, போக்குவரத்து மற்றும் எரிசக்தி துறைகளுக்கான உதவி மானிய செலவுகளுடன்,

பெருந்தொற்று கட்டுப்பாடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள், ஊரடங்கு காலத்தில் வழங்கப்பட்ட ரொக்க நிதியுதவி ஆகிய கூடுதல் செலவுகளின் காரணமாக இந்த உயர்வு ஏற்பட்டுள்ளது. வளர்ச்சி அல்லாத செலவினங்களைக் குறைத்து நிதி நிலைத்தன்மை பராமரிக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை திறம்பட எடுத்து வருகிறது.

நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களில் வருவாய் செலவினங்களின் போக்குகளின் சுருக்கம் பின்வருமாறு:

| வருவாய் செலவினங்கள் | 2020-2021 கணக்குகள் | 2021-2022 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | செப்டம்பர் 2020 வரையிலான கணக்குகள் | செப்டம்பர் 2021 வரையிலான செலவினம் | 2020-2021 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2021-2022 ஆம் ஆண்டில் வளர்ச்சி விகிதம் (செப்டம்பர்வரை) | 2021-2022 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய்கோடியில்) | | | | % | |
| சம்பளங்கள் (கல்விக்கான அரசின் மானிய உதவி உட்பட) | 57,373 | 63,919 | 31,608 | 32,856 | 3.95% | 51.40% |
| ஓய்வூதியங்களும், ஓய்வுகாலப் பலன்களும் | 24,212 | 25,066 | 13,982 | 13,094 | -6.35% | 52.24% |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும், பராமரிப்புகளும் | 10,645 | 14,619 | 4,709 | 3,046 | -35.32% | 20.84% |
| உதவித் தொகைகளும், நிதி மாற்றங்களும் | 1,07,005 | 1,14,633 | 26,991 | 43,730 | 62.02% | 38.15% |
| வட்டி செலுத்துதல் | 37,147 | 42,927 | 13,695 | 1,897 | -86.15% | 4.42% |
| ஏனையவை | 20 | 24 | 6 | 5 | -16.67% | 20.83% |
| **மொத்தம்** | **2,36,402** | **2,61,188** | **90,991** | **94,628** | **4.00%** | **36.23%** |

(ஆ) மூலதனச் செலவினம்

2021-2022 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், மூலதனச் செலவினத்திற்காக ரூ.42,181 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை ரூ.11,402 கோடி செலவிடப்பட்டுள்ளது. இது, மூலதனக் கணக்கு செலவினங்களுக்கான திருத்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டில் 27.03 சதவீதமாகும். முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் ஏற்பட்ட மூலதனக் கணக்கு செலவினம் ரூ.7,435 கோடியாகும். 2021-2022 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதத்திற்கான மூலதனக் கணக்கு செலவினம் கடந்த ஆண்டில் இதே காலகட்டத்தில்

மேற்கொள்ளப்பட்ட செலவினத்தைக் காட்டிலும் 53.36 சதவீதம் உயர்ந்துள்ளது. வேலைவாய்ப்புகளை உருவாக்கும் திறனுக்காகவும், மூலதன செலவுடன் தொடர்புடைய மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 0.5 சதவீத கூடுதல் கடனைப் பெறவும் மூலதன பணிகளை செயல்படுத்தும் வேகத்தினை அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது.

<u>ஆண்டுவாரியான நிதிநிலைக் குறியீடுகள்</u>

பதினைந்தாவது நிதிக்குழுவானது 2021-2022 ஆண்டிற்கு கடன் பெறுவதற்கான வரம்பினை சாதாரணமாக மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 4 சதவீத அளவாகவும், மின்துறை சீர்திருத்த செயல்திறன் அளவுகோலின் அடிப்படையில் 0.50 சதவீத அளவு கூடுதல்

கடன் பெறுவதற்கான வழிவகைக்கும் பரிந்துரைத்துள்ளது. அதன் பின்னர் மத்திய அரசானது சாதாரணமாக நிர்ணயிக்கப்பட்ட கடன் வரம்பான 4 சதவீத அளவில் 0.50 சதவீகிதத்தை மூலதனச் செலவினத்துடன் தொடர்புடையதாக ஒதுக்கியுள்ளது. 15வது நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அரசு, தமிழ்நாடு நிதிநிலை நிறுவாகப் பொறுப்புடைமைச் சட்டம், 2003-ல் திருத்தம் மேற்கொண்டுள்ளது. இத்திருத்தப்பட்ட சட்டத்தின் படி 2023-2024 ஆம் ஆண்டிற்குள் மாநில அரசு வருவாய்ப் பற்றாக்குறையை அறவே நீக்குவதோடு நிதிப் பற்றாக்குறையை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில்

3 சதவீதத்திற்கு மிகாதவாறு பராமரிக்கப்பட வேண்டும்.

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை வருவாய்ப் பற்றாக்குறை ரூ.9,418 கோடியாக உள்ளது. செலவினங்களை கட்டுப்படுத்தியும், வருவாய் வசூலை படி உயர்த்தியும், வருவாய்-செலவினங்களுக்கான இடைவெளியை குறைத்து வருவாய் பற்றாக்குறையைக் கணிக்கப்பட்ட அளவிற்குள் கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அரசானது, கருவூல அமைப்பிற்கு வெளியிலுள்ள அரசின் நிதியினை திரும்ப கொணர்வது, வளர்ச்சிக்கு உதவாத செலவுகளை

குறைப்பது, செலவை மீதப்படுத்தும் நடவடிக்கைகளை, மேற்கொள்வதன் மூலம் நிதிப் பற்றாக்குறையை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் வரையறுக்கப்பட்ட இலக்கிற்குள் பராமரிப்பதில் உறுதியாக உள்ளது.

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியதற்குப் பின்னர் ஆண்டுவாரியான நிதிநிலைக் குறியீடுகளின் நிலவரம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான நிதிநிலைக் குறியீடுகள் பின்வருமாறு:

## நடப்பு ஆண்டின் நிதிநிலைக் குறியீடுகள்

| நிதிநிலைக் குறியீடுகள் | 2021-2022 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் | 2021, செப்டம்பர் மாதம் வரை |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| மொத்த வருவாய் வரவுகள் | 2,02,495 | 85,210 |
| வருவாய் செலவினம் | 2,61,188 | 94,628 |
| வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) | -58,693 | -9,418 |
| மொத்த மூலதனச் செலவினம் (நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் உட்பட) | 41,932 | 12,851 |
| மொத்தச் செலவினம் | 3,03,120 | 1,07,479 |
| நிதிப் பற்றாக்குறை | -92,529 | -22,270 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பீடு | 21,36,351 | 21,36,351 |
| | (%) | |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) (%) (இலக்கு) | --- | --- |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) (%) (உள்ளபடி) | -28.98 | -11.05 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை (%) (இலக்கு) | ---- | ---- |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை (%) (உள்ளபடி) | 4.33 | 1.04 |

<u>நிதிநிலைக் குறியீடுகள் ஆய்வு</u>

வரி வசூல் மீது கோவிட்-19 தொற்றுநோயின் பாதகமான தாக்கம் மற்றும் விலைவாசி உயர்வை குறைக்கவும், பொருளாதாரத்தில் தேவையை தக்கவைக்கும் வகையில் பெட்ரோல் விலை குறைப்பின் காரணமாகவும் 2021-2022 ஆம் ஆண்டிற்கான முதல் ஆறு மாத வரவுகளின் போக்கு திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிலிருந்து விலகி உள்ளது. அதேசமயம், அரசின் பொறுப்பேற்கப்பட்ட செலவினத்தை குறைத்தல் (உதாரணமாக அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி விகித உயர்வினை ஜனவரி 01, 2022-க்கு ஒத்தி வைத்தல்) வளர்ச்சிக்கு உதவாத வருவாய் செலவினங்களைக் கண்டிப்புடன் குறைத்தல் ஆகியவற்றினால் வருவாய் செலவினங்களின் போக்கு 2021-2022 திருத்த வரவு

செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கு இணங்க உள்ளது. மறுபுறம், வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு உதவவும், கூடுதல் கடன் பெறுவதற்கான முதலீட்டு இலக்கை அடையவும் மூலதனச் செலவினங்கள் துரிதப்பட்டுத்த படுகின்றன.

இந்நிதியாண்டின் முதல் காலாண்டில் விதிக்கப்பட்ட ஊரடங்கு காரணமாக வணிக வரிகள், மாநில கலால் வரி மற்றும் மோட்டார் வாகன வரிகள் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் மாநிலத்தின் சொந்த வரி வசூல் பாதிப்படைந்துள்ளது. இதற்கிணையாக, வரி அல்லாத வருவாய் வசூலில் தேக்க நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாநிலங்கள் 2021-22 ஆம் ஆண்டில் கடன் திரட்டுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட வரம்பு மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 4.5 சதவீதம்

ஆகும். இதில் மூலதனச் செலவுடன் தொடர்புடைய 0.50 சதவீதம் மற்றும் மின்துறை சீர்திருத்த செயல்திறனைப் பொறுத்து வழங்கப்படும் 0.50 சதவீதமும் உள்ளடங்கும்.

கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டுதல் மற்றும் நிதி ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மூலம் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்ட நிதிப் பற்றாக்குறை மற்றும் கடனுக்கான வரம்பிற்குள் கட்டுபடுத்த அரசு முனைந்து வருகின்றது.

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் (திருத்தப்பட்டது) கூறப்பட்டுள்ள இலக்குகளுக்கு ஏற்ப, மாநிலத்தின் நிதிநிலையை நிருவகிக்கும் பொருட்டு, நடுத்தரக் கால நிதி நிலவரத் திட்டம்

ஒன்றை நிதிநிலை அறிக்கையுடன் அரசு தாக்கல் செய்து வருகிறது.

2021-2022 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் குறித்த இந்த ஆய்வு, மாநிலத்தின் உண்மையான நிதிநிலையை எடுத்துரைப்பதுடன், நடுத்தரக் கால நிதி நிலவரத் திட்டத்தில் வரவினம்-செலவினம் இடையேயான இடைவெளி ஏதேனும் இருப்பின், அவற்றைச் சமன் செய்ய மாநில அரசு முயற்சிகளை எடுத்து வருகிறது என்பதையும் காட்டுகிறது.

*********

## பின்னிணைப்பு

## ஆண்டுவாரியான நிதிநிலைக் குறியீடுகள்

| விவரங்கள் | வருவாய் உபரி / பற்றாக்குறை | | | நிதிப் பற்றாக்குறை | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த வருவாய் வரவுகளில் (%) (இலக்கு) | (ரூ. கோடியில்) | மொத்த வருவாய் வரவுகளில் (%) (உள்ளபடி) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (இலக்கு) | (ரூ. கோடியில்) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (உள்ளபடி) |
| 2003-2004 கணக்குகள் | - 20.28 | -1565.24 | - 6.60 | 4.01 | 5591.16 | 3.19 |
| 2004-2005 கணக்குகள் | - 17.28 | -703.34 | - 2.47 | 3.76 | 5569.76 | 2.54 |
| 2005-2006 கணக்குகள் | - 14.28 | 1951.33 | 5.75 | 3.51 | 2250.61 | 0.87 |
| 2006-2007 கணக்குகள் | - 11.28 | 2648.26 | 6.47 | 3.26 | 3956.00 | 1.27 |
| 2007-2008 கணக்குகள் | - 8.28 | 4545.49 | 9.57 | 3.01 | 3685.59 | 1.05 |
| 2008-2009 கணக்குகள் | < - 5.00 | 1452.25 | 2.64 | < 3.00 | 8547.76 | 2.13 |
| 2009-2010 கணக்குகள் | ** | - 3531.22 | - 6.32 | < 4.00 | 11807.26 | 2.46 |
| 2010-2011 கணக்குகள் | < - 5.00 | - 2728.69 | - 3.89 | < 4.00 | 16646.62 | 2.85 |
| 2011-2012 கணக்குகள் | 0 / உபரி நிலை | 1364.10 | 1.60 | < 3.00 | 17274.08 | 2.30 |
| 2012-2013 கணக்குகள் | 0 / உபரி நிலை | 1760.27 | 1.78 | < 3.00 | 16518.99 | 1.93 |
| 2013-2014 கணக்குகள் | < - 5.00 | - 1788.24 | - 1.66 | < 3.00 | 20583.49 | 2.12 |
| 2014-2015 கணக்குகள் | ** | - 6407.56 | - 5.23 | < 3.00 | 27162.44 | 2.49 |

| விவரங்கள் | வருவாய் உபரி / பற்றாக்குறை | | | நிதிப் பற்றாக்குறை | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த வருவாய் வரவுகளில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மொத்த வருவாய் வரவுகளில் (%) (உள்ளபடி) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (உள்ளபடி) |
| 2015-2016 கணக்குகள் | ** | -11985.35 | -9.29 | <3.00 | 32627.56 | 2.69 |
| 2016-2017 கணக்குகள் | ** | -12964.13 | -9.24 | <3.00 | 56171.35 | 4.20 |
| 2017-2018 கணக்குகள் | ** | -21593.88 | -14.76 | <3.00 | 39839.51 | 2.76 |
| 2018-2019 கணக்குகள் | <-5.00 | -23459.45 | -13.50 | <3.00 | 47,334.90 | 2.97 |
| 2019-2020 கணக்குகள் | ** | -35908.82 | -20.57 | <3.00 | 60178.64 | 3.24 |
| 2020-2021 கணக்குகள் | ** | -62325.88 | -35.80 | ** | 87742.11 | 4.51 |
| 2021-2022 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் | ** | -58692.68 | -28.98 | ** | 92529.43 | 4.33 |

** இலக்கு நிர்ணயிக்கப்படவில்லை.